# DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 265 of 2024 |
| Deposition of witness for | : | PW8 |
| Name | : | ராஜா |
| Father's Name | : | பாப்பி நாயுடு |
| Village | : | ஆம்பள்ளி |
| Taluk | : | பர்கூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | கூலி |
| Age | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 19th day of June 2025.
எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது ஆம்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். பேக்கரி கடை வைத்து நடத்தி செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கையெழுத்தை நான் 2021 ஆம் வருடம் தேதி, மாதம் ஞாபகத்தில் இல்லை, காலை 10.00 மணியளவில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். எனது நண்பர் முனிராஜ் இறந்த விபத்து வழக்கு சம்பந்தமாக கையெழுத்து செய்து கொடுத்தேன். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.</u>

விபத்து சம்பந்தமாக நீங்கள் வீட்டில் இருந்த போது எவ்வளவு நேரத்திற்கு போன் வந்தது என்றால் காலை 09.00 மணிக்கு இறந்து போன முனிராஜின் உறவினரான சுரேஷ் என்பவர் எனக்கு போன் செய்து விபத்து

குறித்து தகவல் சொன்னார். நீங்கள் தகவல் கேள்விப்பட்டு எந்த இடத்திற்கு சென்றீர்கள் என்றால் ஓரப்பம் பேருந்து நிலையத்திற்கு சென்றேன். அப்போது போலீசார் சம்பவஇடத்தில் இருந்தார்கள் என்றால் ஆமாம். போலீசார் அந்த இடத்தில் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள் என்றால் ஆமாம். உங்களுடன் சேகர் என்பவரும் கையெழுத்து செய்துள்ளார் என்றால் ஆமாம். நீங்கள் சம்பவ இடமான ஓரப்பத்தில் தான் போலீசாரிடம் கையெழுத்து செய்து கொடுத்துள்ளீர்கள் என்றாலும், பார்வை மகசரில் உள்ள கையெழுத்திற்கும் நீங்கள் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக சொல்லும் கையெழுத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரிதான்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

நீங்கள் காவல் நிலையத்தில் கையெழுத்து போடும் போது சேகர் என்பவரும் உங்களுடன் கையெழுத்து செய்தார் என்றால் ஆமாம். தற்போது உங்களிடம் காட்டப்பட்ட கையெழுத்து காவல் நிலையத்தில் வாங்கிய கையெழுத்து தானே என்றால் இது ஓரப்பத்தில் வாங்கியது. அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது, வரைபடம் வரைந்தது தான் தெரியும். அதை போலீசார் எந்த இடத்தில் வைத்து எழுதினார்கள் என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் ஓரப்பத்தில் வரைபடம் வரைந்தார்கள், பின்பு காவல் நிலையத்தில் வந்து எழுதினார்கள்.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 265 of 2024 |
| Deposition of witness for | : | PW9 |
| Name | : | திருப்பதி |
| Father's Name | : | முனியப்பன் |
| Village | : | பாலிநாயனப்பள்ளி |
| Taluk | : | பருகூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | மென்பொருள் பொறியாளர் |
| Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 19th day of June 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது பெங்களூரில் மென்பொருள் பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது சொந்த ஊர் பாலிநாயக்கனூர் ஆகும். விபத்தில் இறந்து போன முனிராஜ் எனக்கு மாமா முறை ஆவார். கடந்த 2022 ஆம் வருடம் ஜீலை மாதம் தேதி எனக்கு ஞாபகம் இல்லை, காலை 06.00-06.30 மணி அளவில் நான் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள PSV கல்லூரி - ஒரப்பம் பகுதியில் நடைபயிற்சி செய்து கொண்டிருந்த போது, எனது ஊரைச் சேர்ந்த ஒரு நபர் முனிராஜ் அவர்களுக்கு விபத்து நடந்ததாக தகவல் சொன்னதின் பெயரில் சம்பவ இடத்திற்கு சென்றேன். சம்பவ இடத்தில் ஒரு பெரிய லாரி இருந்தது, அந்த லாரியின் டயரில் இறந்து போன முனிராஜின் கால் பாகம் இருந்தது, அவரது உடலை ஆம்புலன்ஸ் மூலமாக அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றிருந்தார்கள். அதன் பிறகு நான் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று முனிராஜ் அவர்களின் பிரேத விசாரணையில் கலந்து கொண்டேன். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

உங்களை போலீசார் விசாரிக்கும் போது விபத்து நடந்த இடத்தை போய் பார்த்து விட்டு வந்த விவரத்தை சொன்னீர்களா என்றால் சொன்னேன். விபத்து நடந்த இடத்திற்கு நீங்கள் செல்லவில்லை, அரசு மருத்துவமனைக்கும் செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசார் இவ்வழக்கு சம்பந்தமாக உங்களிடம் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. போலீசார் சொன்னதின் பெயரில் நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :-

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.